இவர்கள் வனப் பகுதிக்குள் வாழ்வதால் பெரும்பாலும் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதோடு மட்டுமின்றி, அடர்ந்த வனப் பகுதியை நன்கு அறிந்துள்ளதன் காரணமாக, வனப் பகுதிகளில் வன மரங்கள் திருட்டு, வேட்டையாடுதல், நக்சல்பாரிகள் ஊடுருவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதால் வன வளத்தையும், வன உயிரினங்களையும் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இப்பணியாளர்கள் வனத்திற்குள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வன வளங்களைக் காக்கும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, பணிபுரிந்து வருவதால், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 10,000 ரூபாயிலிருந்து 12,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) சுற்றுச்சூழலை மேம்படுத்த காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரத்தில் உள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் பற்றிய சுற்றுச்சூழல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக, கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின்படி, சென்னை சேத்துப்பட்டு ஏரி, ஆவடி பருத்திப்பட்டு ஏரி மற்றும் மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டன. தற்போது அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையினை ஏற்று, நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

219 ஏக்கர் விவசாய நிலங்களை ஆயக்கட்டுப் பரப்பாகக் கொண்டது சிட்லபாக்கம் ஏரி. ஆனால், தற்போது அந்த ஏரி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சிட்லபாக்கம் ஏரியைச் சீரமைக்கும் பொருட்டு, ஆக்கிரமிப்பை அகற்றுதல், மண்திட்டுகளால் குறைந்துள்ள நீரின் கொள்ளளவினை அதன் உச்ச கொள்ளளவிற்கு மீளச் செய்தல், ஏரிக்கரையினைப் பலப்படுத்துதல், உபரிநீர் வீணாவதைத் தவிர்த்தல், உபரிநீர் தடுப்புச் சுவர் வசதிகளை மீண்டும் ஏற்படுத்துதல், வெள்ளநீரை வடிகால்கள் மூலமாக

திருப்புதல், கழிவுநீரைத் தடுப்பான்களை ஏற்படுத்தி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் திருப்புதல் போன்ற பணிகள் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல், கூட்டுறவு, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஒரு பொன்னான நாள் என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், அருமையான அறிவிப்புகளை அறிவித்து, நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் இங்கே கேட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் சார்பிலே என்னுடைய அன்பான நன்றியை அவருக்குக் காணிக்கையாக்குகிறேன்.*

நேற்றையதினம் கேள்விகளின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சாலை மற்றும் தார்ச் சாலை வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாங்களெல்லாம் எதிர்பார்க்காத அளவிற்கு இன்றைக்கு உடனடியாக விதி 110–ன்கீழ் அறிவிப்பை அறிவித்து, சாலைகள் அமைக்க 200 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அதில் 57.70 கோடி ரூபாயை இந்த வருடத்திற்கு ஒதுக்கீடு செய்திருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, 'கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். அதைப்போல, 'கேட்டதைக் கொடுப்பவனே, கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று இந்து மதத்தில் சொல்வார்கள். வியர்வை உலர்வதற்குள் கூலியைக் கொடுக்க வேண்டும் என்று இஸ்லாம் மதத்தினர் சொல்வார்கள். கேள்வி கேட்டு 24 மணி நேரத்திலே, இங்கே உடனடியாக நிதிகளையும் வாரி வழங்கி